# அண்டை மாநில நதி நீர்ப் பிரச்சினை; உச்சநீதிமன்றம் மூலம் நமது உரிமையை நிலைநாட்டியுள்ளோம்!

## சட்டப்பேரவையில் – நீர் வளத் துறை அமைச்சர் துரைமுருகன் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், பக்கத்து மாநிலங்களிலுள்ள முதலமைச்சர், இலாகா அமைச்சர்கள் ஆகியோர்கள் தங்களிடம் நல்ல முறையில் பழகுகிறார்களே, ஏன் அவர்களிடம் இதுகுறித்து பேசக்கூடாது? என்று கேட்டார்கள். நான் ஒன்றைச் சொல்கிறேன்; பேசினால் அத்தனை விவகாரமும் கெட்டுப் போய்விடும். பேசிப்பேசி பார்த்து இனி பேசுவதால் பயன் ஒன்றும் இல்லை என்ற முடிவெடுத்துதான், மாண்பமை உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்பமை உச்ச நீதிமன்றம்தான் நம்முடைய உரிமைக்குப் பதிலளித்து சலுகை செய்திருக்கிறது. ஆகையினால்தான், தற்போது ஒவ்வொரு விஷயத்திற்கும் நாம் நேரடியாக உச்ச நீதிமன்றத்தை நாடிக் கொண்டிருக்கிறோம். ஆனால், நாம் பேச ஆரம்பித்தால், மாண்பமை உச்ச நீதிமன்றம் என்ன சொல்லும் என்றால், நீங்களே பேசி தீர்த்துக்கொள்ளுங்கள் என்று கூறிவிடும். இது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் தெரியும்.

**மார்க்கண்டேய நதியில் அணை!**

மார்க்கண்டேய நதி இருக்கிறது, அதில் அவர்கள் ஒரு சிறிய அணை கட்டினார்கள். உடனே நாம் மாண்பமை உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று, “இதுகுறித்து விசாரிக்க, நீதிபதி தலைமையிலான விசாரணைக் கமிஷன் அமையுங்கள்” என்று சொன்னோம். அவர்கள் உடனே, “நீங்கள் பேசிப் பாருங்கள்” என்று சொன்னார்கள்; “முடியாது” என்று நாம் சொன்னோம். மீண்டும் அவர்கள் “பேசிப்பாருங்கள்” என்று சொன்னார்கள். நாம் மேலே சென்றுவிட்டு, நாம் ஒருமுறை பேசினால், அதற்குப் பிறகு அது விவகாரமாகிவிடும். அப்போது, வி.பி. சிங் அவர்கள், “கடைசியாக பேசிப் பாருங்கள்” என்று சொன்னார்கள்; கலைஞர் அவர்கள், “இனி பேசமுடியாது” என்று சொன்னார்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் அன்றைக்கு tribunal நமக்கு வந்தது.

அந்த மாநிலங்களிலே ஏராளமான தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒருமுறை எவ்வளவு பெரிய விபத்து ஏற்பட்டது என்பது நமக்குத் தெரியும்.

ஆகையினால்தான், ஜாக்கிரதையாகப் பேச வேண்டுமென்று நான் நினைத்தேன். ஒருக்கால் நான் குறுக்கிட்டு, வேகத்திலே ஒரு சொல்கூட வந்துவிட கூடாது என்று நினைத்தேன். எனவே, நான் எண்ணியபடி, யாருமே அப்படிப் பேசாததற்காக, இங்கே பேசிய உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே, ஆரம்பித்திலிருந்து காமராஜ் அவர்களிலிருந்து எல்லோரும் பேசிக் கொண்டு வந்தார்கள். அதிலே முல்லைப் பெரியாறு அணை பற்றி பேசினார்கள். திருப்பி நான் சொல்ல வேண்டியிருக்கும். அதாவது, காமராஜ் அவர்கள் பேசுகிற போது, Cauvery Water Management Authority அடிக்கடி கூடுவதில்லை என்று சொன்னார். 30 முறை கூட்டியிருக்கிறோம்.

இரண்டாவது, அவர்கள் மேகதாது அணை கட்டுவதற்கு DPR தயார் செய்துவிட்டார்கள். DPR தயார் செய்து கொண்டு வந்து, Central Water Commission-ல் கொடுத்துவிட்டார்கள். Central Water Commission அதை refer செய்து, Cauvery Water Management Authority-ல் பேசலாம் என்று சொன்னார்கள். நாங்கள் Cauvery Water Management Authority-க்கு மேகதாது அணை குறித்து பேசுவதற்கு கொஞ்சம்கூட உரிமை கிடையாது என்று சொன்னோம். ஆனால், நம்மை மடக்குவதற்காக, Solicitor General-இடம் போய், “whether this Cauvery Water Management Authority has got power or not to discuss about this Mekedatu matter” என்று கேட்டு, “You have power” அப்படி என்று கேட்டு, உங்களுக்கு நிறைய power இருக்கிறது, பேசலாம் என்று சொன்னார். அது பெரிய தவறு என்று சொல்லி, உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று Cauvery Water Management Authority பேசுவதற்கு, அதாவது, மேகதாதுவைக் குறித்துப் பேசுவதற்கு உரிமையில்லை என்று Constitution-லேயே ஒரு பெரிய வரலாறு படைத்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அதனுடைய விளைவு, என்ன செய்தார்கள் என்றால், Central Water Commission அந்த DPR-ஐ திருப்பி அனுப்பி விட்டார்கள். திருப்பி அனுப்பிய DPR-ஐ மறுபடியும் திருப்பி கொண்டுபோய் கொடுத்தார்கள். அதற்குமேல் Forest Department-க்கும், சுற்றுச்சூழல் துறைக்கும் அனுப்பப்பட்டது. சுற்றுச்சூழல் துறை, தமிழ்நாட்டினுடைய சம்மதம் இல்லாமல் காவிரிப் பிரச்சினைக்கு எந்த உரிமையும் தர முடியாது என்று அடித்துச் சொன்னார்கள். இன்றைக்கு நாம் தைரியமாக உட்கார்ந்திருக்கிறோம். நாங்கள் சும்மா இல்லை. நீங்கள் ஆட்சியில் இருக்கும்போது, நீங்களும் பேசியிருப்பீர்கள், போய் இருப்பீர்கள். நாங்களும் ஆட்சியில் இருக்கிறோம், போய் வந்துதான் இருக்கிறோம்.

**முல்லைப் பெரியாறு வழக்கு!**

அதேபோல முல்லைப் பெரியாறு பற்றி சொன்னார். முல்லை பெரியாறில் என்ன? எப்படி வந்தது? நாமும் case போட்டோம், கர்நாடகாவும் case போட்டார்கள். நம்முடைய High Court-ல் ஒரு case, அவர்களுடைய High Court-ல் ஒரு case. Same matter-ல் அப்படியிருக்கக் கூடாது. உடனே தலைவர் Supreme Court-ல் இரண்டையும் சேர்த்து விசாரிக்க வேண்டுமென்று வழக்குப் போட்டார். உடனே இங்கிருந்த case, transfer ஆனது. அங்கு போய் கேட்டவுடன், அதற்கு பிறகுதான் நமக்கு 142 அடி வர வேண்டும் என்று சொன்னார்கள். 142 அடி எடுத்து இன்றைக்குத்தான் அதை நிவர்த்தி செய்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் மாற்றாந்தாய் மனமா, நாங்கள் மாற்றாந்தாய் மனமா? (எதிர்க்கட்சித் தலைவர் குறுக்கீடு)

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எப்போதும் சிலநேரங்களில் உண்மையை டமால் டமால் என்று போட்டு உடைத்துவிடுவார்கள். இப்போது என்ன சொல்கிறார், நான் நிறுத்தவில்லை என்று சொல்கிறார், அப்படியானால் உங்களுக்கு முன்பிருந்த அம்மா நிறுத்தி விட்டார்களா? (எதிர்க்கட்சித் தலைவர் குறுக்கீடு)

எப்படி அது நீண்ட நாள் காய்ந்து கிடந்தது என்பதை பேரவைத் தலைவர் அவர்களே அறிவார்கள். அது அவர் ஊர் பிரச்சினை. ஆக எப்படியோ பிரச்சினையை காரணம் காட்டி நின்றுவிட்டது. அதை நீங்களாக நிறுத்தினீர்களா அல்லது அதுவாக நின்று விட்டதா என்று தெரியவில்லை. ஆனால்,



**“காவிரி – குண்டாறு இணைப்புத் திட்டம்; முத்தமிழறிஞர் கலைஞரின் கனவுத் திட்டம்! கலைஞரின் கனவை – அவரது மகன் – தளபதி நிச்சயம் நிறைவேற்றுவார்!”**

எப்போதுமே வரவில்லையென்று சொல்கிறீர்கள்? அதுவும் தவறு. 14 முறை 142 அடிக்கு நாம் வந்திருக்கிறோம். சில நேரங்களில் தெரிந்து சொல்லலாம், தெரியாமலும் சொல்லலாம்.

இன்னொன்றையும் சொன்னார்கள், “நடந்தாய் வாழி காவிரி திட்டம் என்னவாயிற்று என்று கேட்டார். நடந்தாய் வாழி காவிரி திட்டத்திற்கு நாங்கள் என்ன against ஆக உள்ளோமா? நாங்களும் விரும்புகிறோம், ஆனால் பணம்?

காவிரி, திருமணிமுத்தாறு, சரபங்கா, பவானி, அமராவதி, நொய்யல் ஆகிய ஆறுகளை மாசின்றிப் பாதுகாப்பது, புத்துயிர் பெறச் செய்தல், நீராதாரங்களை மேம்படுத்துவது இதன் நோக்கம். அதுதான் நடந்தாய் வாழி காவிரி திட்டம்.

முதற்கட்டமாக காவிரி ஆறு மேட்டூரிலிருந்து திருச்சிராப்பள்ளி வரையில் மற்றும் அதன் 5 கிளைகள், இரண்டாவது கட்டம் திருச்சிராப்பள்ளி முதல் கடல் முகத்துவாரம் வரை. மூன்றாவது ஒரு கட்டம், இந்தக் கட்டத்திற்கு மொத்தம் ரூ.934 கோடி தேவை. மத்திய அரசின் பங்கு 60 சதவிகிதம் ரூ.560 கோடி ரூபாய், மாநில அரசின் பங்கு ரூ.373 கோடி. நிதி மத்திய சர்க்காரிலிருந்து வரும்போது அதைச் செய்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம்.

**சரபங்கா திட்டம்!**

அதேபோல, எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் ஒன்று சொன்னார். நாங்கள் சரபங்கா திட்டத்தைக் கொண்டு வந்தோம், அத்திக்கடவு-அவிநாசி திட்டத்தைக் கொண்டு வந்தோம் என்று சொன்னார்கள். நாங்கள் இல்லையென்று சொல்லவில்லையே! நீங்கள் கொண்டு வந்த திட்டமாச்சே, அதை கிடப்பில் போடுங்கள் என்று எங்கள் தலைவர் சொல்லவில்லையே! (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கும் மேலே பணம் கொடுத்து, அதை முடித்து வைத்தோம். சரபங்கா திட்டத்திற்கு நீங்கள் உங்கள் ஆட்சியில் பெரிய முயற்சி எடுத்து என்ன செய்தீர்கள்? எதிர்க்கட்சித் தலைவருக்கு தெரியும்.

ஒரேயொரு ஊர் அது ஆட்டையாம்பட்டியோ, காட்டையாம்பட்டியோ என்று ஒரு ஊர். அந்த ஊர்க் குளத்திற்கு மட்டும்தான் கொடுத்தீர்கள். ஆனால், எண்ணிக்கை நாங்கள் வந்ததற்குப் பிறகு எல்லா குளத்திற்கும் கொடுத்திருக்கிறோம். அந்த திட்டத்தை நிறைவேற்றி இருக்கிறோம்.

அதேமாதிரி அத்திக்கடவு-அவிநாசி நாங்கள் அதையும் நிறைவேற்றியிருக்கிறோம். அதைக்கூட இன்றைக்குக் கேட்டார்கள், மீதி இருக்கிற பணிகளுக்கும் கொடுங்கள் என்று கேட்டார். கொடுக்க முடியாது, அதற்கு இப்போது ரூ.6,000 கோடி தேவைப்படுகிறது. ஆனால் நீங்கள் அப்படி இல்லையே! நாங்கள் கொண்டுவந்த திட்டம் என்று நினைத்து தாமிரபரணி-கருமேனியாறு திட்டத்தை 2009-ல் கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டினார். அதற்குப்பிறகு அப்படியே கிடப்பிலே போட்டீர்கள். 10 வருடங்கள் வீணாகிவிட்டது. கடைசியில் நாங்கள் வந்துதான், இருப்பதைத் தட்டி நாங்கள் வந்துதான் அதை மறுபடியும் எடுத்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**போட்டி அரசாங்கம்!**

ஆகையினால், ஒரு ஆட்சி வந்தால் அவர்கள் சில திட்டங்களைப் போடுவார்கள். எந்த ஆட்சியாக இருந்தாலும் அவர்கள் மக்களுக்காகப் போடுவார்கள். ஜனநாயகத்தில் அடுத்து ஒரு கட்சி வரலாம். மறுபடியும் அந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும். அப்போதுதான் அது மக்களுக்குச் சென்று சேருமேதவிர, இல்லாவிட்டால் போட்டி அரசாங்கம்தான் நடத்திக் கொண்டிருக்க வேண்டிய நிலை ஏற்படும்.

அதேபோன்று மற்றவர்களெல்லாம் பேசினார்கள். நம்முடைய ஈஸ்வரப்பன் அவர்கள் நிறைய கருத்துகளை சொல்லி இருக்கிறார். அவைகளை எல்லாம் நாங்கள் மறுக்கவில்லை. அதிகமாக அவர் பேசியதில் நான் உடன்படுகிறேன். பல கருத்துகளை எல்லாம் சொன்னார்கள்.

இன்னொரு பிரச்சினையை சொல்கிறேன் கேளுங்கள். நம்முடைய நிலைமை இந்த உச்ச நீதிமன்றத்தில் நாம் போட்டிருக்கிற வழக்குகள் மட்டும் காவேரி பிரச்சினைக்கு 9, முல்லை பெரியாறு பிரச்சினைக்கு 9, பாலாறு பிரச்சினைக்கு 2, பெண்ணையாறு நதிநீர் பிரச்சினைக்கு 1, நொய்யல் ஆறு பிரச்சினைக்கு 1 மொத்தம் நீதிமன்றங்களில் 22 case. இந்த 22 case-களுக்கும் எத்தனை கோடி ரூபாய் செலவாகி இருக்கிறது என்பது அவருக்கே தெரியும். அதனால்தான் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனாலும், நான் மற்ற நண்பர்கள் பேசியதை எல்லாம் மனதில் வைத்து, நான் என்னுடைய பேச்சை தொகுத்து தருகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**நீர்வளத்துறை!**

நீர்வளத் துறையைப் பொறுத்தவரையில் 90 நீர்த் தேக்கங்கள், 14,135 குளங்கள், 619 தடுப்பணைகள், 1,087 அணைக்கட்டுகள், 25 தரைகீழ் தடுப்பணைகள், 9,070 கிலோ மீட்டர் கால்வாய்கள், 308 படுகை அணைகள் போன்ற பல்வேறு நீர் நிலைகள் நீர்வளத் துறையால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வளவு நீர்நிலைகளையும் பராமரித்தல், பாதுகாத்தல், நீர்வளங்களை மேம்படுத்துதல் ஆகியவற்றிலுள்ள முக்கியத்துவத்தை உணர்ந்த நமது முதல்வர் அவர்கள் “நீர்வளத் துறை” என்று ஒரு துறையை தனியாக பிரித்துக் கொடுத்தார்கள். ஏனென்றால் அதற்கு முன்னர் இத்துறை PWD-யுடன் சேர்ந்திருந்தது.

ஒருகாலத்தில், PWD துறையுடன் buildings and irrigation, இரண்டும் ஒன்றாக இருந்தது. ஆனால், நீர்வளத் துறைக்கென தனியாக அமைச்சர் இருக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டதால், எங்கள் தலைவர் அவர்கள், தேர்தல் அறிக்கையில் அறிவித்தவாறு, அதனைப் பிரித்ததால்தான் நீர்வளத் துறை உருவாகியது.

கடந்த நான்காண்டுகளில், இந்தத் துறையின் வாயிலாக விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் பயனளிக்கும்விதமாக பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறோம். பல்வேறுவிதமான பணிகளைச் செய்து முடித்திருக்கிறோம்.

2021 ஆம் ஆண்டில் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றபோது நடைபெற்றுக்கொண்டிருந்த திட்டங்களுக்குத் தேவையான நிதியொதுக்கம் செய்து, பணிகளை விரைவாகச் செய்து முடித்திருக்கிறது, அரசு. மேலும், 2021 ஆம் ஆண்டில், கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, நடைபெற்றுக்கொண்டிருந்த திட்டங்கள் மட்டுமல்ல, அவர்களால் கொண்டுவரப்படாத திட்டங்களுக்கும் தேவையான நிதியொதுக்கம் செய்து, பணிகளை விரைவாக செய்து முடித்திருக்கிறது.

அத்திக்கடவு-அவிநாசி திட்டம்: பவானி ஆற்றின் காளிங்கராயன் அணைக்கட்டின் கீழ்ப்புறத்தில் ஒரு திருப்பணை அமைத்து 1.5 டி.எம்.சி. உபரிநீரை நீரேற்று முறையில், 1,045 ஏரிகள், குளங்கள் மற்றும் குட்டைகளில் நிரப்புதல் பணி குறித்து, இத்திட்டத்தை 2018 ஆம் ஆண்டில் துவக்கியிருந்தார்கள். தொடர்ந்து நிதியொதுக்கம் செய்து,-Materials வாங்குவது உட்பட-பணிகளை நாங்கள் முடித்திருக்கிறோம். அத்திட்டம், 17-8-2024 அன்று மக்கள் பயன்பாட்டிற்கு திறந்துவைக்கப் பட்டுள்ளது. 1,045 ஏரிகள், குளங்கள் மற்றும் குட்டைகளில் நீர் சென்றடைந்துள்ளது. அதேபோன்று, தாமிரபரணி திட்டத்தையும் அவர்கள் விட்டுச் சென்றிருந்தாலும், அத்திட்டத்தை இந்த அரசு முடித்திருக்கிறது.

அடுத்து, கல்லணை-கால்வாய்த் திட்டம். கல்லணைக் கால்வாயின் முழுக் கொள்ளளவான 4,200 கன அடியை மீட்டெடுப்பது, நீர் கடத்தும் திறனை அதிகரிப்பதற்காக போன்றவற்றிற்காக ERM திட்டத்தின்கீழ் நிதி கோரப்பட்டுள்ளது. நிதி விரைவில் பெறப்படும். அதில் ஒன்றும் சந்தேகம் இல்லை. (சிரிப்பு) காவேரி-வைகை-குண்டாறு இணைப்புத் திட்டம் என்ன ஆயிற்று என்று எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேட்டார்கள். அது நல்ல திட்டம். அத்திட்டம் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் கண்டுபிடித்த திட்டம். அதனால்தான் எங்கள் தலைவர் அவர்கள் மாயனூரில் ஏற்கெனவே ரூ.156 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி அந்தக் தடுப்பணையைக் கட்டினார்கள். தற்போது 5 அடி உயரத்திற்கு தண்ணீர் இருக்கிறது. அங்கிருந்து கால்வாயை வெட்டி, புதுக்கோட்டைக்குக் கொண்டு சென்று, வெள்ளாற்றோடு கலந்து, அது அப்படியே செல்ல வேண்டும். அப்போது நாங்கள் ஆட்சியிலிருந்து சென்றுவிட்டோம். 10 ஆண்டுகாலம் நீங்கள் ஆட்சியில் இருந்தீர்கள்; ஒன்றும் செய்யவில்லை. வாய் உலர்கிறது.

இரண்டு பணிகள் செய்தீர்கள். ஒன்று, கரூர் ஜில்லாவிற்குட்பட்ட பகுதியில் ஒரு இடம் வருகிறது; அதற்கு ஒரு tender; அதை விட்டு, 56 கி.மீ. தூரத்திற்கு அப்பால் உள்ள இடத்திற்கு ஒரு tender என tenders விடப்பட்டுள்ளன. யாராவது இப்படி செய்வார்களா? ஒன்று, நிலம் ஆர்ஜிதம் செய்துவிட்டு tender எடுப்பார்கள். அந்த அமைச்சருக்கு வேண்டிய இடத்தில் அங்கு ஒரு tender, மற்றொரு அமைச்சருக்கு வேண்டிய இடத்தில் மற்றொரு இடத்தில் ஒரு tender என, இந்த tenders-ஐ விட்டுவிட்டு சென்றதால், தற்போது அந்தத் திட்டம் அம்போ என்று நிற்கின்றதே! அதற்கு யார் நிதி ஒதுக்கம் செய்வது? யாரிடம் கேட்பது? (குறுக்கீடு)

துரைமுருகன்: என்ன சொல்கிறார்? (குறுக்கீடு) நான் உங்களுக்கு வேண்டப்பட்டவர் என்று சொல்லவில்லையே sir. யாரோ எடுத்துக்கொண்டார்கள். நமக்கு என்ன ஆனது? ஆனால், திட்டம் சென்றுவிட்டது. இப்போது அதற்கு நிறைய நிதி தேவை. ஆகையினால், எங்களுடைய நிதிநிலையில் இந்த ஆண்டு அதை எடுத்துக்கொள்ள முடியவில்லை. அடுத்த ஆண்டுக்குள் மத்திய அரசினுடைய நிதியிலோ அல்லது வெளிநாட்டுக் கடனையோ பெற்று, நிச்சயமாக அந்தத் திட்டத்தை முடிப்பார் எங்கள் தலைவர் என்று நான் உறுதியளிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) காரணம்,

**காவிரி – வைகை – குண்டாறு இணைப்புத் திட்டம் எங்கள் தலைவர் கலைஞர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. அந்தத் திட்டத்தை அவருடைய மகன் முடிக்காமல் விட மாட்டார். முடித்துக் காட்டுவார் என்பதை உங்களுக்கு நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)**

**வண்டல் மண் திட்டம்!**

அடுத்து, இன்னொன்று சொன்னார். கிராமம், கிராமமாக செய்தேன் என்று சொன்னார். மராமத்து மாதிரியாவது கொண்டு வாருங்கள் என்று சொன்னீர்கள். நீங்கள் நன்றாக sound-களை கிளப்புகிறீர்கள் sir. மராமத்து என்னவாயிற்று? அது ஒரு விவசாயிக்குத்தான் தெரிந்தது என்று அவர் நன்றாகச் சொன்னார். விவசாயிக்குத்தான் தெரியும் என்றார். அப்படியென்றால், நாங்கள் யார்? I.A.S., officer-ஆ? (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் யார் sir? நான் சொன்னேன். எங்களுடைய ஊரில் உள்ள பள்ளிக் கூடத்திலிருந்து வந்த சின்னப் பையன். நாள் எனக்கு ஏரோட்டத் தெரியும், 2 மலை ஓட்டத் தெரியும், எல்லாம் தெரியும் sir. எல்லாவற்றையும் செய்துவிட்டு வந்தவன் தான் sir இந்த துரைமுருகன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது RRR இருக்கிறது. RRR-ல் நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். RRR-ல் பணம் வந்திருக்கிறது. அதில் நாங்கள் செய்திருக்கிறோம். மற்ற திட்டங்களையும் எடுத்துச் செய்திருக்கிறோம். ஆகையினால், நீங்கள் செய்தது அந்தப் பெயர்; நாங்கள் செய்தது இந்தப் பெயர். மத்திய சர்க்கார் இதற்கெல்லாம் பணம் கொடுக்கிறது. அதை நாங்கள் use செய்துகொண்டிருக்கிறோம்.

வண்டல் மண் திட்டத்தை எடுத்து விட்டார்கள் என்று இன்னொன்றையும் சொன்னார்கள். அது நல்ல கருத்துதான். வண்டல் மண் எடுத்தால், ஒன்று, ஆழமாக இருக்கிறது, தண்ணீர் வருகிறது. நல்லதைத்தான் நீங்கள் சொன்னீர்கள். ஆனால், அந்த வண்டல் மண்ணை எடுப்பதற்கு நீங்கள் கூறிய வருணனையைப் பார்த்தால் நீங்களெல்லாம் சினிமாவுக்குச் சென்றிருக்கலாம் sir. ஒரு விவசாயியின் மகன் வேட்டியைத் தூக்கிக் கட்டிக் கொண்டு (சிரிப்பு) காவிரி அணையில் நின்று கொண்டு- என்னால்லாம் கூறினீர்களே! நான் ஒன்று கேட்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் வேட்டியைத் தூக்கிக் கட்டினார். நாங்கள் pant அணிந்துகொண்டு வருகிறோம். (சிரிப்பு) என்ன sir? எல்லாம் நாட்டில் நடக்கிறது தான். (குறுக்கீடுகள்) நீங்கள் சொன்னதற்காக நான் சொல்கிறேன். RRR திட்டத்தின்கீழ், ரூ.106 கோடியில் 153 ஏரிகள் புனரமைக்கப்பட்டிருக்கின்றன. ரூ.418 கோடி-இவ்வளவும் நாங்கள் செய்திருக்கிறோம்.

அடுத்து, மேகதாது அணையைப் பற்றி நான் சொன்னேன். (குறுக்கீடு)

உறுப்பினர் காமராஜ் அவர்கள், Cauvery Water Management Authority கூட்டம் நடத்தப்படவில்லை என்று சொன்னார். அது பற்றி நான் சொல்கிறேன். Management Board 26 முறை கூடியிருக்கிறது. Cauvery Water Regulation Committee 68 முறை கூடியிருக்கிறது. ஆக, தமிழ்நாட்டின் நிலைப்பாட்டை அதில் நாங்கள் விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

இன்னொன்றைக் குறித்தும் நான் இந்த அவையிலே சொல்ல விரும்புகிறேன். மேகதாது அணைக் கட்டுவது என்பது அவ்வளவு easy இல்லை. முதலில், கர்நாடக அரசு DPR தயார் செய்ய வேண்டும். DPR தயார் செய்து, Central Water Commission-க்கு அனுப்ப வேண்டும். அதனை Central Water Commission ஒத்துக்கொண்டார்கள் என்றால், அதற்குப் பிறகு Central Electricity Authority of India-க்கு அனுப்ப வேண்டும். Central Electricity Authority of India pass செய்தார்களென்றால், அதற்குப் பிறகு Ministry of Environment, Forest and Climate Change-க்கு அனுப்ப வேண்டும். அங்கேயும் pass ஆனால், Tiger Reserve Authority-க்கு அனுப்ப வேண்டும். Tiger Reserve Authority-யிலிருந்து The Cauvery Water Disputes Tribunal-க்கு அனுப்ப வேண்டும்.

**பாண்டியாறு–புன்னம்புழா திட்டம்!**

இவ்வளவு பேர்களையும் தாண்டி முழு சம்மதத்தைப் பெற்று, கடைசியில், தமிழ்நாட்டினுடைய முழு சம்மதத்தையும் பெற்றால்தான் மேகதாது அணையைக் கட்ட முடியுமே தவிர, எந்தக் கொம்பனாலும் மேகதாது அணையை இப்போது கட்ட முடியாது என்பதைத் திடமாக நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் என்னவாயிற்று என்று அவர் கேட்டார். பாண்டியாறு-புன்னம்புழா இடத்திற்கு நான் நேரில் சென்று பார்வையிட்டிருக்கிறேன். தோவாலாவிலிருந்து பக்கத்தில் செல்கிறது. நியாயமாக, அங்கு ஓடுகிற தண்ணீரைப் பார்த்தால், ஒரு பெரிய குண்டு அங்கு இருக்கிறது. அந்தக் குண்டை தள்ளிவிட்டால் நமக்கு தண்ணீர் வந்துவிடும். ஆனால், பிரச்சினை, சாலைப் பணிகள் பாதிக்கப்படுகின்றன. அது ஒரு நல்ல திட்டம். அரசாங்கத்தினுடைய நிதிநிலைமைக்கேற்ப அவற்றை நாங்கள் நிச்சயமாக எடுத்துக் கொள்வோம் என்ற உறுதியை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் உரையாற்றினார்.